பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**30 03 2026** **6 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** வழக்கு விசாரணைகளில் விரைந்து தீர்வு காண்பதை உறுதி செய்யும் வகையில் சட்டத்துறையில் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**2.** சிறார்கள் மற்றும் இளைஞர்கள் போதைப்பொருள் பழக்கத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சமூகநீதித்துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் வலியுறுத்தியுள்ளார்.

**3.** தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

**4.** தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த **4** நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5.** ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், மும்பை அணி **6** விக்கெட் வித்தியாசத்தில், கொல்கத்தா அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வழக்கு விசாரணைகளில் விரைந்து தீர்வு காண்பதை உறுதி செய்யும் வகையில் சட்டத்துறையில் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள தேசிய கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், வழக்கு விசாரணைகளில் காலதாமதம் ஏற்படுவதைக் குறைக்கும் வகையில், சட்ட நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு, தொழில்நுட்பம் சக்தி வாய்ந்த கருவியாக உள்ளது என்று அவர் கூறினார்.

மக்களுக்கு குறித்த நேரத்தில் நீதி கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

இணைய வழி சட்ட உதவிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள், சட்டத்துறையில் தொழில்நுட்பப் பயன்பாட்டின் வலிமைக்கு சிறந்த உதாரணமாக திகழ்கிறது என்று திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<>>>>

சிறார்கள் மற்றும் இளைஞர்கள் போதைப்பொருள் பழக்கத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சமூகநீதித்துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற போதைப்பொருள் பழக்கத்திலிருந்து விடுபடுவது மற்றும் மறுவாழ்வு தொடர்பான தேசிய ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அவர் கலந்துகொண்டு பேசினார்.

போதைப்பொருள் பழக்கத்தை தடுப்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக உள்ளது என்றும், இதுகுறித்த கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை குழு உறுப்பினர்கள் தொடர்ந்து வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் இதுகுறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ள பெண்கள் மற்றும் சிறார்களுக்கான மறுவாழ்வு மையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

போதைப்பொருள் தடுப்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கான நடைமுறைகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

திவால் சட்டத் திருத்த மசோதா, மக்களவையில் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

2016-ம் ஆண்டு இயற்றப்பட்ட இச்சட்டத்தில், நடைமுறைகளில் ஏற்படும் காலதாமதத்தைக் குறைப்பதற்கும், நிறுவனங்களுக்கும், தனி நபர்களுக்கும் இடையேயான சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வகையிலும் உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்கு இம்மசோதா வகைசெய்கிறது.

மேலும், நாட்டில் நக்சல் தீவிரவாத செயல்களை முற்றிலும் ஒடுக்குவது குறித்தும் அவையில் விவாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மாநிலங்களவையில், மத்திய ஆயுதக் காவல் படையின் பொது நிர்வாகம் தொடர்பான மசோதா இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மத்திய ஆயுதக் காவல் படையில் பணி நியமனம் மற்றும் சேவைகள் தொடர்பான நிர்வாக விதிமுறைகளில் சீர்திருத்தம் கொண்டு வரும் நோக்கில் இந்த மசோதா தாக்க செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

சட்டப்பேரவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்ச்சி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Raguraja — 53 Sec)**

<<<<>>>>

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

வேட்புமனு தாக்கல் செய்வதற்கு ஏப்ரல் 6-ம் தேதி கடைசி நாளாகும்.

வேட்புமனு பரிசீலனை அடுத்த மாதம் 7-ம் தேதி நடைபெறும்.

வேட்புமனுவை திரும்ப பெறுவதற்கு அடுத்த மாதம் 9-ம் தேதி கடைசி நாளாகும்.

வேட்புமனு தாக்கல் செய்யும்போது குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்நிலையில் மார்ச் 31 மற்றும் ஏப்ரல் ஒன்றாம் தேதிகளில் வேட்புமனு தாக்கல் நடைபெறாது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ள நிலையில் விதிமீறல்கள் குறித்து தேர்தல் பறக்கும் படை மற்றும்

கண்காணிப்பு குழுக்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஆய்வு செய்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக சென்னையில் உள்ள சட்டப்பேரவைத் தொகுதிகளில் கண்காணிப்புக் குழுவினர் நேற்று மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளில் உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட ஒரு லட்சத்து 29 ஆயிரத்து 220 ரூபாய் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<>>>>

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதிகள் மற்றும் தென் தமிழக கடலோர பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு வெப்பநிலை இயல்பைவிட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்க கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தெற்கு லெபனானில் விமானப் படைத் தாக்குதல் நடவடிக்கைகளை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ளது.

-----------

ஆஃப்கனிஸ்தானில் உள்ள குனார் மாகாணத்தில் பாகிஸ்தான் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது தாக்குதல் நடத்தி வருவதாக அந்நாட்டு அரசு குற்றம் சாட்டியுள்ளது.

-----------

பங்களாதேஷில் டாக்கா, மைமன்சிங், சட்டோகிராம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தட்டம்மை தொற்று பரவி வருவதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

-----------

தேசிய அளவிலான திறன் மேம்பாட்டுப் போட்டிகள் உத்தரப்பிரதேச மாநிலம் கிரேட்டர் நொய்டாவில் நேற்று தொடங்கியது.

-----------

மேற்குவங்க மாநிலத்தில் பவானிபூர் மற்றும் நந்திகிராம் உள்ளிட்ட முக்கிய தொகுதிகளில் உள்ள காவல் நிலைய அதிகாரிகளை தேர்தல் ஆணையம் பணியிட மாற்றம் செய்துள்ளது.

-----------

வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி சென்னை ஆயிரம் விளக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் வினாடி-வினா நிகழ்ச்சி நடைபெற்றது.

-----------

தூத்துக்குடியில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி பொதுமக்கள் அதிக அளவில் கூடும் முத்துநகர் கடற்கரைப் பகுதியில் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

-----------

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே இலங்கைக்கு கடத்துவதற்காக கொண்டுவரப்பட்ட போதைப்பொருள், நிலக்கரி,

வெளிநாட்டு வகை சிகரெட் உள்ளிட்ட பொருட்களை கடலோர காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

-----------

-----------

***விளையாட்டுச் செய்திகள்***

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், மும்பை அணி **6** விக்கெட் வித்தியாசத்தில், கொல்கத்தா அணியை வென்றது.

மும்பையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் பேட் செய்த கொல்கத்தா அணி, நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில், **4** விக்கெட் இழப்பிற்கு **220** ரன் எடுத்தது.

**221** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய மும்பை அணி **19** புள்ளி ஒரு ஓவரில் **4** விக்கெட் இழப்பிற்கு **224** ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இன்று நடைபெறும் போட்டியில், சென்னை அணி, ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

குவஹாத்தியில் நடைபெறும் இப்போட்டி, இரவு **7.30** மணிக்கு தொடங்குகிறது.

------------

உலக **Wushu** தற்காப்புக் கலை சாம்பியன்ஷிப் போட்டியில், இந்தியா இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

சீனாவின் தியான்ஜின் நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில், மகளிர் பிரிவில், இந்தியாவின் அனு-வும், ஆடவர் பிரிவில், இந்தியாவின் **Goutham Mankas**-ம் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

**29 03 2026 6 45 Sports-2**

இந்தியாவின் **Upendro Thougam, Pama Helba Singh, Yuvraj, Victor** ஆகியோர் இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<The End>>>>**